# விவிலியத்தில் பொறுமை

*முனைவர் எ. சோபியா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

***முன்னுரை***
*மனிதன் மோட்ச வாழ்வை இழந்ததற்குக் காரணம் பொறுமையின்மையே. இப்படும் பாவம் சமுதாயத்தின் அனைத்துப் பகுதிகளையும் சீர்குலையச் செய்துள்ளது. சமுதாயத்தின் ஓவ்வொரு தனி மனிதனையும் சீர்கேடாக்கிக் கொண்டிருக்கிறது.*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6425

## பொறுமையின் சிறப்பு

வியாபார உலகில் கூடுதல் பொறுமையிருந்தால் கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றுதல் குறையும். குடும்பவாழ்வில் கூடுதல் பொறுமையிருந்தால் உடையும் குடும்பங்களின் எண்ணிக்கை குறையும். நெடுஞ்சாலைகளில் கூடுதல் பொறுமையிருந்தால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோர் குறைவர். கிறிஸ்தவ வாழ்வில் கூடுதல் பொறுமையிருந்தால் சபையில் சத்தற்றோர் குறைவர். ஊழியத்தில் கூடுதல் பொறுமையிருந்தால் ஊழிய முறைகளில் மாம்சீகம் குறையும். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். பொறுமையைக் கூட்டுவதே நமது பிரச்சனைகளைக் குறைக்க வழி.

## கிறிஸ்துவின் பொறுமை

சர்வ வல்லவரின் பெயரே பொறுமையின் தேவன் என்றிருக்கிறது கிறிஸ்தவ வாழ்வு ஓர் ஓட்டமென்றாலும் அதைப் பொறுமையோடே ஓடவேண்டும் பொறுமையுள்ள கிறிஸ்தவனே பலமுள்ளவன் என்பது பவுலின் கோட்பாடு. ஆவியின் கனிகளின் பட்டியலிலுள்ள முதல் மூன்றும் அடுத்து வரும் ஆறு பண்புகளின் விளைவாகும். அந்த ஆறில் பொறுமையே முதலிடம் பெற்றுள்ளது. அன்பைப் பற்றிய மகத்தான விளக்கத்திலும் முதலில் வருவது பொறுமையே. ஆன்மீகத்தைப் புரணப்படுத்தும் சக்தி பொறுமைதான். "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், புரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது புரண கிரியை செய்யக் கடவது *(யாக்.1:4)*"[1]. பொறுமை கடலினும் பெரிது.

பொறுமையின் வல்லமையை கிறிஸ்துவின் வாழ்க்கை வெகுவாகச் சித்தரிக்கிறது. நமது படிப்பினைக்காக வேதத்தில் கூடுதல் எடுத்துக்காட்டுகளும் உண்டு.

### வளர்ச்சிக்குப் பொறுமை

ஆன்மீகப் பிறப்பு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நடந்து விடுவது. வளர்ச்சியோ நெடுகவே நடப்பது. தேவ குமாரனாகப் பிறந்த இயேசு தமது வளர்ச்சிக்காக ஏறத்தாழ 30 ஆண்டுகள் எடுத்துக் கொண்டார். அது வரை தமது வெளி யுலக ஊழியத்தைத் துவங்கவில்லை.

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுசர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் லூக்கா (2:52).

தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப்.9:20) 2.

வாலிபன் இயேசு பன்னிரு வயதிலேயே எவ்வளவோ தெரிந்திருந்தார். அவரது ஞானம் மார்க்கத் தலைவரையும், மக்களையும் வியப்பில் ஆழ்த்திற்று. ஆனாலும், நிச்சயமாக அவருக்கு அவசரவுணர்வு இருந்தும், ஆத்திரப்பட்டு ஊழியத்தில் இறங்கவில்லை. காத்திருந்தார். சுற்றியுள்ள தேவைகளால் அழுத்தப்பட்டுத் தள்ளப்படத் தம்மை அனுமதிக்கவில்லை.

தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய முதல் கடிதத்தில் தலைவனொருவன் புதிய சீடனாயிருக்கக் கூடாதென்று வலியுறுத்தினான் அதிகார ஆசனங்களுக்கு முதிர்ச்சியற்றவன் தூக்கப்படும்போது பெருமை அவனை அலைக்கழிக்கிறது. பல்டியடித்துத் தலைமோதி தனக்கு அவமானத்தையும் தேவனது ஊழியத்திற்கு அவமகிமையையும் கொண்டு வருகிறான். பவுல் இதை பிசாசின் வீழ்ச்சிக்கு ஒப்பிடுகிறான். 4, 5 ஆம் வசனங்களில் வீட்டுப் பொறுப்பைக் குறித்தும் 7ஆம் வசனத்தில் உலகில் மதிப்பாக நடந்து கொள்வதைக் குறித்தும் அப்போஸ்தலன் எழுதுகிறான்.

வாழ்நாள் முழுவதும் பவுல் தனது சொந்த வளர்ச்சியைக் குறித்து மிகுந்த அக்கறை கொண்டிருந்தான். மரணத்தை எதிர் நோக்கியிருந்த வேளையிலும் தனது “புத்தகங்களைக்” கொண்டு வரச் சொன்னான்!

### வழிநடத்துதலுக்குப் பொறுமை

பொறுமையாகக் காத்திருத்தலே தேவசித்தம் செய்ய சிறந்த வழியாகும். தனக்குத் தேவையான உணவை விடப் பிதாவின் சித்தம் செய்வது இயேசுவுக்கு முக்கியமாயிருந்தது. தான் என்ன செய்ய வேண்டுமென்று பிதா விரும்புகிறாரென்பதைத் தெரியும்வரை அவர் காத்துக் கிடந்தார். எச்சூழலிலும் பதறாமல் அச்சமயத்தில் பிதா என்ன செய்திருப்பாரென்று அறிந்துகொள்ள அமைதியாகத் தியானித்தார்.

மணவீட்டில் திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார் (யோ.2:3,4)3. வேறு விதமாகச் சொன்னால், அச்சமயத்தில் எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று பிதா இன்னும் அவருக்குச் சொல்லவில்லை. வேலைக்காரர் பொறுமையாகிக் காத்திருக்கத் துவங்கிய பின்தான் இயேசு பேச ஆரம்பித்தார். காத்திருந்த அவ்வேளையில் அங்கு இருந்தவற்றையெல்லாம் இயேசு சுற்றிப் பார்த்திருக்கலாம். பெரிய பாத்திரங்களையும் அவைகளை நிரப்பப் போதுமான தண்ணீரையும் கண்டார்! அதே வேளையில் மேலிருந்தும் அவருக்கு ஆலோசனைகள் வந்திருக்கும். என்னே எடுத்துக்காட்டு!

தேவனுக்கு முன்னால் ஓடாதீர்கள். பின்தங்கியும் விடாதீர்கள். அவரிடமிருந்து அமர்ந்திருப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். அது “பயிரின் மேல் காயும் காந்தியுள்ள வெயிலைப் போலவும், அறுப்புக்காலத்து உஷ்ணத்தில் உண்டாகும் பணிமேகத்தைப் போலவும்” இருக்கும்.

**உயர்வுக்குப் பொறுமை**

கூடாரப் பண்டிகை சமீபமாயிருந்தது. பண்டிகைக்குப் போய் வெளியரங்கமாக அற்புதங்களைச் செய்யும்படி இயேசுவின் சொந்தச் சகோதரர் அவரை வற்புறுத்தினார்கள். "பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்" என்றனர் அவர்கள்! இயேசுவின் பதிலைக் கவனியுங்கள்: "என் வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது"

உயர்வுத் திட்டத்தைச் சிபாரிசு செய்தது தமது சொந்த சகோதரரெனினும் இயேசு அதை நிராகரித்தார். ஜென்ம சுபாவ மனிதன் தேவ காரியங்களை அறியமாட்டானென்றும், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகையென்றும் இயேசு அறிந்திருந்தார்.

உயர்வு கிழக்கிலிருந்தோ, மேற்கிலிருந்தோ, தெற்கிலிருந்தோ அல்ல, மேலிருந்தே வருமென இயேசு அறிந்திருந்தார். திடமான இவ்வெண்ணத்தினால் தான் இதுபோன்று மலையுச்சியில் வந்ததொரு சோதனையை அலட்சியமாகத் தூக்கியெறிந்தார். எல்லா முழங்கால்களும் முடங்கி தனது கர்த்தத்து வத்தை அறிக்கை பண்ணவிருக்கும் பிதா குறித்துள்ள வேளைக்காகக் காத்திருக்கத் தன்னை இயேசு பயிற்றுவித்திருந்தார்.

ஆகையால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1பேது 5:6)[5]. தேவன் நமக்கென்று நியமிக்காத இடத்திற்கு ஒரு மனிதனும் நம்மைத் தூக்கமுடியாது, அப்படியே, அவர் நம்மை வைத்துள்ள இடத்திலிருந்து எவனும் நம்மை இறக்க முடியாது. நமக்கிழைக்கப்பட்ட அநியாயத்தைத் தேவன் சரிக்கட்டுவார். இச்சத்தியத்தை எவ்வளவு சீக்கிரம் கற்கிறோமோ அவ்வளவு மேல். அப்பொழுது குழப்பங்களும், போராட்டங்களும் நமக்குக் குறையும். நம்மை நாமே உயர்த்திப் பிரபலமாக்க எடுக்கும் முயற்சிகள் யாவும் நம்மைப் பிசாசின் கரங்களில் ஒப்படைக்கும். முடிவு பரிதாபமாயிருக்கும்.

**நிதானிப்பதற்குப் பொறுமை**

சிக்கலான வேளைகளிலும் நமது நாசரேத்துத் தச்சரின் பொறுமையை என்னவென்று சொல்வது! விபசாரத்தில் கையும், மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டவளை அவரிடம் கொண்டு வந்தார்கள். குற்றஞ் சாட்டினோர் வேதப் போதகரும், சபைத் தலைவருந்தான். இயேசுவின் நியாயத்தீர்ப்பைக் கோரினர். அவரோ கேளாதவர் போல் குனிந்து தரையில் எழுதத் துவங்கிவிட்டார். தலைவர்களோ அவரை விட்டார்களில்லை. எனவே அவர், "உங்களில் பாவமில்லாதவன் இவள் மீது முதலாவது கல்லெறியட்டும்" என்றார். அவர்களெல்லாரும் மனச்சாட்சியில் குத்துண்டு, அவளைக் கல்லெறியத் தகுதியுள்ள ஒரே நபராகிய அவருக்குமுன் அவளை விட்டுவிட்டு, ஒவ்வொருவராகக் கடந்து சென்றனர். இயேசு அவளைப் பார்த்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை!" என்றார்.

"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்: இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார், அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும். (1 கொரி 4:5)[6]". பிறரது தவறுகளைக் குறித்து பொறுமையாயிருப்போம், அவர்கள் நமது தவறுகளைக் குறித்துப் பொறுமையாயிருக்க வேண்டுமே! நியாயந்தீர்த்துக்கட்டும் மனப்பான்மை எத்தனை நண்பரைப் பிரித்துவிட்டது, எத்தனை ஐக்கியங்களை உடைத்து விட்டது! பிறர்மீது நாம் பொறுமையிழப்பது போல் தேவனும் நம்மீது பொறுமையிழந்தால் நம் கதி? ஏழெழுபது தரம் பொறுத்திருப்போம்.

துன்மார்க்கத்திற்குத் தன்னை விற்றுப் போட்ட இவ்வுலகை நியாயந்தீர்க்க இயேசு என்றோ திரும்பியிருக்கலாம். அவரோ மனந்திரும்ப போதுமான சமயமில்லையென்று

யாரும் கெட்டுப் போகக்கூடாதென்று தமது வருகையையைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கின்றார். அவரது பொறுமையைத் தாமதமென்று மக்கள் தப்பாகக் கணிக்கிறார்கள்.

### பாடுகளில் பொறுமை

வனாந்தரத்தின் வழியே நடந்து செல்லாமல் வாக்குத்தத்த தேசத்திற்கு அப்படியே பறந்து போக நாம் விரும்புவதே நமது இன்றையப் பிரச்சனை. நமது பொறுமையின்மையானது தாமதம், இருட்டு ஆகிய முட்கள் மூலம் கற்றுக் கொள்வது பொறுமையே.

முன்னணை முதல் முள்ளாணி வரை கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் பாடுகளால் நிறைந்திருந்தாலும் இறுதி நாட்களில் அவை அளவுக்கு மீறின. சுவிசேசுங்களின் இறுதி அத்தியாயங்களை வாசித்துப் பாருங்கள். அங்கு அவரது பொறுமையே தலைதூக்கி நிற்கும். தனது ஆண்டவர் அநியாயமாக அனுபவித்த பாடுகளைக் கண்ணாரக் கண்ட பேதுரு, "நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையுடன் சகித்தால் அதுவே தேவனுக்கு முன் பிரியமாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" என்றெழுதினான்.

"இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்: கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்: கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே (யாக் 5:11)7". "நீங்கள் பலவித சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாக எண்ணுங்கள்" பொறுமையே மிகப்பெரிய இடிதாங்கி.

### முடிவுரை

பொறுமையைப் பற்றித் தனது சபை மேய்யப்பர் செய்த பிரசங்கத்தைக் கேட்ட ஒரு சிறுமி, "ஆண்டவரே, எனக்கு பொறுமையைத் தாரும், இப்பொழுதே அது எனக்கு வேண்டும்!" என்று ஜெபித்தாளாம். எல்லாப் பண்புகளையும் விட பொறுமையைக் கற்றுக்கொள்ள அதிக பொறுமை தேவை. பொறுமையாயிருக்க நீங்கள் தீர்மானித்தவுடன், உங்கள் பொறுமையைச் சோதிக்கும் பட்டாளங்கள் அணிவகுத்து வரும். விட்டு விடாதீர்கள். பொறுமை மன்னர் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுங்கள். வேதத்தின் கடைசிப் புத்தகத்தில் யோவான் தன்னை அறிமுகப்படுத்துவது போல் நீங்களும் இயேசு கிறிஸ்துவின் பொறுமைக்கு உடன்பங்காளனாய்" வாழுங்கள் பரிசுத்தவான்கள் சாத்தானை முடிவாக முறியடிப்பது பொறுமையினாலேயே. பொறுத்தார் புமியாள்வார்!

### அடிக்குறிப்புகள்

1. பரிசுத்த வேதாகமம், யாக்கோபு 1:4
2. பரிசுத்த வேதாகமம், லூக்கா 2:52
3. பரிசுத்த வேதாகமம், அப்போஸ்தலர் 9:20
4. பரிசுத்த வேதாகமம், யோவான் 2:3,4
5. பரிசுத்த வேதாகமம், 1 பேதுரு 5:6